3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 [ஆ.இ.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எஎ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏஏ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1987 மே 8]

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் எதிர்ப்பதாக தயவுசெய்து கருதிவிட வேண்டாம். மனப்பூர்வமாக நான் ஆதரிக்கிறேன். ஆனால், ஆதரிக்கின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் செய்கின்ற தவறுகளைக் கண்டுபிடிப்பதற்கு இவர்கள் செய்கின்ற தவறுகளை நிரூபிப்பதற்கு பொது மக்களிடமிருந்து......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். : இது அறிமுக நிலைதான். நாளைக்கு டிஸ்கஷன் வரும்போது விரிவாகப் பேசலாம். (குறுக்கீடு) அறிமுக நிலையில் அப்போஸ் செய்து முடித்து விட வேண்டும். இப்போது ஒரு டிபேட் வரக்கூடாது. (குறுக்கீடு) அப்போஸ் பண்ணவில்லை என்று நீங்களே முதலில் சொல்லி விட்டீர்கள். பில்லை அறிமுகம் செய்யும்போது அப்போஸ் பண்ணும் வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் அப்போஸ் செய்யவில்லை, பாராட்டுகிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். பாராட்டுபவர் நாளைக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக பாராட்டுங்கள் (குறுக்கீடு) நாளைக்குப் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) அறிமுக நிலையில் எதிர்க்கிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படிச் சொன்னால் அதை ரெக்கார்டு செய்யலாம். நீங்கள் பாராட்டுகிறேன் என்று சொல்லிவிட்டீர்கள்.

திரு. மா. மணிமாறன் : பாராட்டுகிறேன் என்று சொன்னால் அதற்காக நான் ஆதரிக்கிறேன் என்று அர்த்தம் அல்ல....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி டிஸ்கஷனில் சொல்லலாம். (குறுக்கிடு) கொஞ்சம் நான் சொல்லுவதைக் கேளுங்கள். நீங்கள் எதை, எப்போது வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைத்தால் எப்படி சில விதி முறைகள் இருக்கின்றன. நீங்கள் டிஸ்கஷனில் பேசும்போது பாராட்டலாம், எதிர்க்கலாம், எல்லாம் செய்யலாம். (குறுக்கீடு) அப்போது டிஸ்கஷனில் பேசுங்கள். இது அறிமுக நிலைதான். (குறுக்கீடு) அறிமுக நிலையில் பேசவே முடியாது. (குறுக்கீடு) அப்ஜெக்ட் செய்வது என்றால் (I object to it at the introduction stage.) என்று சொல்லலாம், அவ்வளவு தான் சொல்லலாம். (குறுக்கீடு) இப்படி விதிகளையும் மரபுகளையும் உங்களுக்காக மாற்றச் சொல்லாதீர்கள். (குறுக்கிடு)

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஐஐ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு. 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஓஓ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு. 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்போஸ் பண்ணவேண்டுமென்றால், பண்ணுங்கள். கொஞ்சம் விதிகளையும் படியுங்கள். அப்போஸ் பண்ணுகிறோம் என்று சொல்லுங்கள். அதை அனுமதிக்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : இந்தச் சட்டத்தை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். எதிர்ப்பதற்குக் காரணம், அதிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய.......(குறுக்கீடுகள்).